## ஆவடி மாநகராட்சி

### 13.06.2019 அன்று நடைபெற்ற சாதாரணக்கூட்ட தீர்மான எண்.800

### 01.09.2019 முதல் கட்டிட உரிமக்கட்டணங்கள் திருத்தியமைத்தல் குறித்த அறிவிக்கை

(ந.க.எண்.766/2019/எப் 1, நாள் 9.8.2019)

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31359/18/டிபி3 நாள் 05.03.2019 எண்ணிட்ட சுற்றறிக்கையில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ல் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கவும் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்குவது தொடர்பாக புதிய விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளது. மேற்படி விதிமுறைகளின்படி தற்போதைய கட்டிட அனுமதி காலம் அளவு 3 வருடங்கள் என்பது மாற்றியமைக்கப்பட்டு கட்டிட அனுமதி ஐந்து வருடங்களுக்கும், தேவைக்கேற்ப மேற்படி அனுமதி காலம் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு புதுப்பித்துத்தரவும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

எனவே, புதிய விதிமுறைகளின்படி ஏற்கனவே வசூலித்து வரப்பட்ட கட்டணம் 3 ஆண்டுகளுக்கு என்பது 5 ஆண்டுகள் என்பதாகவும், புதுப்பிக்கும் காலம் மூன்று ஆண்டுகள் என்பதாலும் கட்டண விகிதம் ஏற்கனவே உள்ளதை மாற்றி புதியதாக கட்டண விபரம் பட்டியலின் படி திருத்தியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டிட உரிமக் கட்டணங்கள் பட்டியல் நகராட்சி அலுவலக அறிவிப்பு பலகையில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கட்டிட விகிதத்தினை 01.09.2019 முதல் அமுல் செய்திடவும், இது தொடர்பான அறிக்கையினை மாவட்ட அரசிதழில் வெளியிடவும் நகர மன்ற தீர்மான எண்.800 நாள் 13.06.2019ல் மன்ற அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பொருள் குறித்து விவரங்களை அலுவலக வேலை நாட்களில் தெரிந்து கொள்ளலாம்.

**கட்டிட உரிமக்கட்டணங்கள் திருத்தியமைத்தல்**

| வ. எண் | நகராட்சி சட்டப் பிரிவு | விவரம் | அளவு | கால அளவு | பழைய கட்டணங்கள் வசூலித்த விகிதம் | புதியதாக திருத்தப்பட்ட கட்டணம். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 175 | மனைப்பிரிவு மற்றும் உட்பிரிவு ஆய்வுக் கட்டணம் ஒரு மனைக்கு | ஒரு முறை மட்டும் | ஒரு முறை மட்டும் | 200 | 500 |
| 2 | 176 | 1) மனைப்பிரிவு மற்றும் உட்பிரிவு கட்டணம் (Layout fees & Sub division) | ஒரு ஏக்கர் அதன் பாகத்திற்கு | ஒரு முறை மட்டும் | 3000 | 10000 |
| | | 2) சாலை அமைப்பு கட்டணம் | 1 ச.மீ | ஒரு முறை மட்டும் | 500 | 700 |
| 3 | 183 | a) கட்டிடங்களுக்கு முன்னால் உள்ள தெருக்கள் மற்றும் புறம்போக்கு நிலத்தில் தற்காலிகமாக பந்தல், நிழல் தட்டி முதலியவைகள் போட்டுக்கொள்ள | 1 ச.மீ அதன் பாகத்திற்கு | மூன்று திங்கள் மட்டும் அதாவது (ஏப்ரல், மே, ஜூன் மாதம் மட்டில்) கோடைக் காலம் மட்டில் | 200 | 500 |
| | | b) அரசு நிலத்தில் சாக்கடை குழி, வடி கிணறு, வடிகால் மூடிகள் கட்டிக்கொள்ள | 1 ச.மீ அதன் பாகத்திற்கு | ஒரு ஆண்டிற்கு | 200 | 300 |
| | | c) உற்சவம், கல்யாணம் (அ) மற்ற விசேஷ காலங்களில் புறம்போக்கு நிலத்தில் பந்தல் போட | 10 ச.மீ வரையில் | மூன்று நாட்கள் | 200 | 300 |

| கட்டிட உரிமக்கட்டணங்கள் திருத்தியமைத்தல் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வ. எண் | நகராட்சி சட்டப் பிரிவு | விவரம் | அளவு | கால அளவு | பழைய கட்டணங்கள் வசூலித்த விகிதம் | புதியதாக திருத்தப்பட்ட கட்டணம். |
| | | d) நகர எல்லையில் தற்காலிக தனியார் பொழுது போக்கு நிகழ்ச்சியின் பந்தல் இயந்திர விளையாட்டு சாமான் பொருட்கள் அமைக்க<br>பொருள் ஒன்றுக்கு<br>பந்தல்அமைக்க<br>ஆய்வு கட்டணம் | 1<br>1 ச.மீ<br>ஒரு முறை | அனுமதி காலத்திற்கு | | 500<br>500<br>1000 |
| 4 | 186 | தெருக்களில் போக்குவரத்து இடஞ்சல் இன்றி கட்டிட சாமான்கள் சேகரித்து வைக்கவும் மற்றும் மழைநீர் வடிகால் பாதிக்காத அளவிலும் 10 ச.மீட்டருக்கு உட்படும் | 10 ச.மீ | தெருக்களில் போக்குவரத்து இடஞ்சல் இன்றி கட்டிட சாமான்கள் சேகரித்து வைக்க கட்டிட உரிமக் கட்டணத்தில் 30 சதவீதம் வசூல் செய்யப்படும் இத்தொகை திருப்பி வழங்கப்பட மாட்டாது. | 1500 | 3000 |
| 5 | 196 | வீடுகளில் சொந்த சூரட்டின் பேரில் பந்தல் போட்டுக் கொள்ள போடும் போது கட்டப்படும் மூன்று நாட்கள் மட்டும் | 10 ச.மீ | மூன்று நாட்கள் | 100 | 200 |
| 6 | 197, 199 | குடிசை அல்லாத ஒரு கட்டிடத்தை கட்ட (அ) புதுப்பித்து கட்ட கூடுதல் கட்டிடம் கட்ட அனுமதி அளித்தல் | | | | |
| | | 1) குடியிருப்பு வீடும் ஒட்டுக்கூரை, தகரக் கூரை, சிமெண்ட் தகரக் கூரை மற்றும் லைட்ருப் அமைக்க | 10 ச.மீ | ஐந்து ஆண்டுகளுக்கு | 150 | 250 |
| | | 2) R.C.C மற்றும் தட்டோடு, தரைதளம் மற்றும் பேஸ்மண்ட் புளோர் அமைக்க | 10 ச.மீ அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டுகளுக்கு | 150 | 300 |
| | | 3) முதல் மாடி கட்டிடம் கட்ட | 10 ச.மீ அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டுகளுக்கு | 150 | 360 |
| | | 4) இரண்டாம் தளம் கட்ட | 10 ச.மீ அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டுகளுக்கு | 150 | 380 |

| கட்டிட உரிமக்கட்டணங்கள் திருத்தியமைத்தல் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வ. எண் | நகராட்சி சட்டப் பிரிவு | விவரம் | அளவு | கால அளவு | பழைய கட்டணங்கள் வசூலித்த விகிதம் | புதியதாக திருத்தப்பட்ட கட்டணம். |
| | | 5) மூன்றாம் தளம் மற்றும் அதற்கு மேலும் | 10 ச.மீ அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டுகளுக்கு | – | 400 |
| | | 6) குடியிருப்பு அல்லாத வணிக கட்டிடம் கட்ட தரைத்தளம் முதல்தளம் கட்ட | 10 ச.மீ அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டுகளுக்கு | 200 | 500 |
| | | 7) செப்டிக் டேங்க் | 10 ச.மீ அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டுகளுக்கு | 200 | 500 |
| | | 8) சுவர் (அ) வேலி முதலியவை அமைத்தல் 2.40 மீ உயரம் மேற்படாமல் | 1 மீ நீளத்திற்கு | ஐந்து ஆண்டுகளுக்கு | 30 | 50 |
| | | 9) கிணறு (அ) ஆழ்துளை கிணறு வெட்ட அனுமதி | ஒன்றுக்கு | ஐந்து ஆண்டுகளுக்கு | 200 | 500 |
| | | 10) இட ஆய்வு கட்டணம் | ஒரு முறை மட்டும் | ஒரு முறை மட்டும் | 500 | 1000 |
| | | 11) குடியிருப்பு வீடு கட்ட மனை அங்கீகரிக்க | ஒரு முறை மட்டும் | ஒரு மனைக்கு ஒரு முறை மட்டும் | 500 | 1500 |
| | | 12) குடியிருப்பு அல்லாத கட்டுமானங்கள் கட்ட மனை அங்கீகரிக்க (கடை, குடோன் அலுவலகம் கட்டுமானங்கள் கட்ட) | ஒரு முறை மட்டும் | ஒரு மனைக்கு ஒரு முறை மட்டும் | | 2500 |
| | | 13) இதர கட்டிட மனைகள் அங்கீகரிக்க (கல்வி, தொழிற்சாலை மருத்துவமனை குடிசைத் தொழில், லேபர், ஓட்டல், கல்யாண மண்டபம் கட்ட) | 500 ச.மீ அதன் பாகம் | ஒரு மனைக்கு ஒரு முறை மட்டும் | 1000 | 5000 |
| | | 14) சர்வே வரைபடம் அடங்கல் நகல் வழங்க | 1 சர்வே எண்ணுக்கு | ஒரு முறை மட்டும் | 150 | 500 |
| | | 15) மனைப்பிரிவு வரைபட நகல், கட்டிட வரைபட நகல் வழங்க | ஒன்றுக்கு | ஒரு முறை மட்டும் | 100 | 250 |
| | | 16) மாடிபடி | ஒன்றுக்கு | ஐந்து ஆண்டுகளுக்கு | 80 | 500 |

| கட்டிட உரிமக்கட்டணங்கள் திருத்தியமைத்தல் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வ. எண் | நகராட்சி சட்டப் பிரிவு | விவரம் | அளவு | கால அளவு | பழைய கட்டணங்கள் வசூலித்த விகிதம் | புதியதாக திருத்தப்பட்ட கட்டணம். |
| | | 17) மின்தூக்கி | | ஐந்து ஆண்டுகளுக்கு | | 3000 |
| | | 18) மேல்நிலை நீர்தேக்க தொட்டி (OHT) | | ஐந்து ஆண்டுகளுக்கு | 80 | 500 |
| | | 19) மனையில் உள்ள பழைய கட்டிடத்தினை இடிக்க இடிமான கட்டணம் | 1 சதுர மீட்டர் | ஒரு முறை | 20 | 100 |
| | | இதர கட்டணங்கள் | | | | |
| | | 20) கட்டிட அனுமதி விண்ணப்பம் | ஒன்றுக்கு | – | 200 | 500 |
| | | 21) நகர வரைபட நகல் வழங்க | ஒன்றுக்கு | – | 150 | 250 |
| | | 22) நகராட்சி வரைபட வரைவாளராக உரிமம் வழங்க<br>a) கட்டணம் | ஒரு முறை மட்டும் | 5 ஆண்டு | 1000 | 5000 |
| | | 23) நகராட்சி வரைபட வாளரர்களின் தொழில் வரி கட்டணம் | | நிதி ஆண்டு | | வருவாய் பிரிவு |

ஆவடி,
2020 ஜனவரி 24.

**ந. இரவிச்சந்திரன்.**
ஆணையாளர்,
ஆவடி மாநகராட்சி.

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநரால் அரசு மைய அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது